# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12905/SCIC/2023**

திருமதி S. நாராயணி — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு. — பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 12.12.2022 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், செங்கல்பட்டு மாவட்டப் பதிவுத்துறை, செங்கல்பட்டு என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், செங்கல்பட்டு மாவட்ட பதிவாளர் அளித்த கடிதம் ந.க.எண்.329/அ2/2022 நாள் 25.08.2022 மற்றும் கூடுதல் பதிவுத்துறை தலைவர் அளித்த கடிதம் ந.க.எண்.21883/எல்1/2022 நாள் 11.07.2022 ஆகிய கடிதங்களின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை 2 இனங்களில் தகவல்களாக வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. மனுதாரர் 10.04.2023 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. அதன்பின்னர் மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 15.07.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 12905/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 25.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மேல்முறையீட்டு 20.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 24.12.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபனை கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் அவரது மகன் திரு ராஜ்கமல் என்பவருடன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ப. புனிதா. பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரரின் மனுவிற்கு 20.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் அதே தகவல்கள் 28.03.2025 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். அதில் மனுதாரர் கோரிய கடிதங்கள் தொடர்பாக திருப்போரூர் சார்பதிவாளரிடம் அறிக்கை கோரியும், திருப்போரூர் வட்டாட்சியரிடம் பட்டா மெய்த்தன்மை கோரியும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அக்கடித நகல்கள் பதில் கடிதத்துடன் இணைத்து மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். ஆனால் மேற்படி கடிதங்கள் தொடர்பாக திருப்போரூர் சார்பதிவாளர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர்களுடமிருந்து எந்தவித பதில் கடிதங்களும் தங்கள் அலுவலகத்திற்கு இதுவரை வரப்பெறவில்லையென்றும் தெரிவித்தார். மேலும் மனுதாரரின் மனு சம்மந்தப்பட்ட சர்வே எண்கள் தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறையிடமிருந்தும் தடையில்லா சான்றிதழ் பெறப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு மனுதாரர் மேற்படி நிலம் / சொத்தானது தங்களுக்கு சொந்தமானது என்றும், ஆனால் வில்லங்கசான்றில் இந்து சமய அறநிலையத்துறை சார்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொதுத் தகவல் அலுவலர் ஒருமாத காலஅவகாசம் வழங்கும்பட்சத்தில் மனுதாரர் கோரிய தகவல்கள் / அறிக்கைகள் ஆகியவற்றை அவருக்கு வழங்குவதாக விசாரணையின்போது தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர்களின் வாதங்கள், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆணையத்தால் பரிசீலனைக்கு செய்யப்பட்டு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

- **மனுதாரரின் 12.12.2022 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுவிற்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பொதுத் தகவல் அலுவலரால் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. எனவே, மனுதாரரால் மனு அளித்தபோது பொதுத் தகவல் அலுவலராக பணிபுரிந்த திருமதி P. புவனேஸ்வரி, மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), தற்போது மாவட்ட பதிவாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், விழுப்புரம் என்பவர் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்காத காரணத்திற்காக அவர்மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்படி அலுவலரின் காரண விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவரிடமிருந்து பெற்று 13.05.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்கவேண்டும்.**
- **மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக திருப்போரூர் சார்பதிவாளரின் அறிக்கை மற்றும் பட்டா மெய்த்தன்மை குறித்து திருப்போரூர் வட்டாட்சியரின் அறிக்கை ஆகியவற்றுடன் மனுதாரரின் சர்வே எண்களுக்கு இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து தடையில்லா சான்றினையும் பெற்று ஒருமாத காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பி, அதை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினை 13.05.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12905/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

திருமதி P. புவனேஸ்வரி,
**(முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்)**
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
விழுப்புரம். (**தற்போது**)

**<u>மனுதாரர்:-</u>**

திருமதி S. நாராயணி,
த/பெ செங்கழணி,
எண்.38/91, வீரப்பெருமாள் கோவில்தெரு,
மைலாப்பூர், சென்னை 600 004

**<u>நகல்</u>**

பதிவுத்துறைத் தலைவர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

Copy to: File TK/PS